தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 17, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 30, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு."

பொது நன்மையின் பொருட்டு பெரியோர்கள் சொல்லும் கடும் சொற்களானாலும், அவற்றைச் செவியாறக் கேட்டு நடப்பவருக்கு இவ்வுலகமானது எப்பொழுதும் அடங்கியே நடக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 241,* திரு. *ஆ. ராஜகோபால், மாண்புமிகு பொதுப் பணி,* மதுவிலக்கு *& ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

241—

தூர்வாரும் பணி

***25379—திரு. ஆ. ராஜகோபால்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு *& ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியம், வல்லம்பட்டி கிராமத்தில் கண்மாய்கள் தூர்வாரி கரைகள் பலப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியம், வல்லம்பட்டி கிராமத்தில் பொதுப் பணித் துறை கண்மாயை நவீனப்படுத்தும் பணிக்கு ரூ.44 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. (ஆ) நபார்டு வங்கி கடனுதவி பெற்று இப்பணி மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 242, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

242—

புதிய பாலம்

***42410—திரு. இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகரில், முதுகுளத்தூருக்குச் செல்லும் சாலையில் பழுதடைந்த நிலையிலுள்ள பாலத்தை புதிதாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 243, திரு. அ. நடராஜன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

243—

அங்காடிக் கட்டடம்

***11017—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—